## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

11 OCT 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

### மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

### ECOS 3104 இலங்கைப் பொருளாதாரம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

---

01. (a) வறுமை என்னும் எண்ணக் கருவினை வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

(b) இலங்கையில் வறுமை தொடர்பான உமது அவதானிப்புக்கள் எவை?

(10 புள்ளிகள்)

(c) இலங்கையில் வறுமைக்கான காரணங்களை விளக்கி இலங்கையில் வறுமையினைத் தணிப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

02.(a) ஒரு நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தியினை துரிதமாக அடைவதற்கு சமூக பொருளாதார செலவுகள் மீது அதிகம் செலவிட வேண்டும் என்பது கோட்பாட்டு ரீதியான வாதமாகும். நீர் இவ்வாதத்தினை ஏற்றுக் கொள்கின்றீரா? கோட்பாடு மற்றும் இலங்கையில் காணப்படும் நடைமுறைகள் மீது கவனம் செலுத்தி உமது விடையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(b) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்கு இலங்கை அதிகளவில் பொதுப்படுகடனில் தங்கியுள்ளது. பொதுப்படுகடன் அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய பொருளாதார ரீதியான பின்விளைவுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

03. (a) 1951 – 2013 காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்திய காரணிகளை அடையாளங் கண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(b) நீண்ட காலத்தில் நிலையான பொருளாதார வளர்ச்சியினை தொடர்ந்தும் அடைந்துகொள்வதற்கு இலங்கை எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்? உமது விடையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

04. (a) இலங்கையின் வரி முறைமையில் நேரில் வரிகள் அதிக முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் எவையென நீர் கருதுகின்றீர்?

(13 புள்ளிகள்)

(b) இந்தியா, கென்யா, உகண்டா போன்ற நாடுகள் கூட நேர் வரிகள் மூலம் அதிக வருமானத்தினைத் திரட்டும்போது இலங்கை அவ்வாறு நேர் வரிகள் மூலம் அதிக வருமானத்தினை திரட்ட முடியாமைக்கான காரணங்க்ள் எவையென நீர் கருதுகின்றீர்?

(12 புள்ளிகள்)

05. (a) உலக மயமாக்கம் என்பதனால் நீர் கருதுவது யாது?

(05 புள்ளிகள்)

(b) இலங்கை துரித பொருளாதார வளர்ச்சியினை அடைந்துகொள்வதில் உலக மயமாக்கத்தின் முக்கியத்துவத்தினை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

(c) உலகமயமாக்கத்தினை அளவீடுவதற்கான தகுதிவிதிகளை (Criteria) விளக்கிக் கூறுக.

(10 புள்ளிகள்)

06. "சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கையின் பொருளாதார செயலாற்றத்தினை பல காரணிகள் பாதித்துள்ளதாக பொருளியலாளர்களால் வாதிடப்படுகின்றது." அவ்வாறான காரணிகளை அடையாளங்கண்டு சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் எவ்வாறு அக்காரணிகள் இலங்கையில் பொருளாதார செயலாற்றத்தினை பாதித்துள்ளன என்பதனை விளக்குக.

(25 புள்ளிகள்)

*****